# பரம நம்பிக்கை

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்
(சங். 143:10)

ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

ESTD. : 1978

மலர் - 49 | செப்டம்பர் – 2026 | இதழ் - 9


## பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்துகிற தேவன்

**சகோதரி ரீட்டா ஏசாயா**

**ஏசாயா 41:10 – நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். கர்த்தர் நம்மை பெலப்படுத்தி அவருடைய நீதியின் வலது கரத்தினால் நம்மைத் தாங்கி நடத்தி வருகிற மகிமையான அனுபவங்களை இந்த வருடத்திலே இந்த இதழ் மூலமாகத் தியானித்து வருகிறோம். இது உங்கள் ஆத்துமாவுக்குப் பிரயோஜனமாயிருக்கும் என்று நம்புகிறோம்.

இந்த இதழிலே பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலேயே ஆகும் (சகரி 4:6) என்ற வசனத்தை தியானிக்கப் போகிறோம். தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களைச் செங்கடலைக் கடக்கப் பண்ணி வனாந்திர வழியாய் நடத்தி கனானைச் சுதந்தரிக்கச் செய்தார். அவர்கள் அந்த தேசத்தை சுதந்தரித்து அதிலுள்ள ஏழு ஜாதிகளைத் துரத்திவிட்டு அங்கே குடியிருந்தார்கள். யோசுவா தேசத்தை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்திருக்க நீங்கள் கர்த்தரை விட்டு அந்நிய தேவர்களைச் சேவித்தால், அவர் திரும்பி உங்களுக்குத் தீமை செய்து உங்களை நிர்மூலமாக்குவார் என்றான். ஜனங்கள் அப்படியல்ல நாங்கள் கர்த்தரையே சேவிப்போம் என்றார்கள் (யோசு.24:30, 31)

யோசுவா உயிரோடிருக்கும் நாளளவும் அவர்கள் கர்த்தரையே சேவித்தார்கள். அதன்பின் கர்த்தரை விட்டு அந்நிய தேவர்களைச் சேவிக்க ஆரம்பித்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளையும் இராஜாக்களையும் ஏற்படுத்தி, அவர்களைப் பாதுகாத்தார். அதன்பின் இராஜாக்கள் கர்த்தருக்குப் பயப்படாமல் போகவே ஜனங்கள் விக்கிரக ஆராதனை செய்து புற ஜாதிகளின் அருவறுப்புகளினால் மிகவும் துரோகம் பண்ணி, தேசத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்காக இரக்கமுள்ளவராகி, தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கனவே அனுப்பினார். ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளின் சொல்லைக் கேளாமல் அவருடைய வார்த்தைகளை அசட்டை பண்ணினார்கள். தீர்க்கத் தரிசிகளைப் பரியாசம் பண்ணினார்கள். எனவே கர்த்தருடைய உக்கிரம் அவர்கள் மேல் மூண்டது. சகாயமில்லாமல் போயிற்று. எனவே கல்தேயரின் இராஜாவின் கையில் தேவன் தம்முடைய ஜனத்தை ஒப்புக் கொடுத்தார். அவன் சாலோமோன் கட்டின பிரமாண்டமான ஆலயத்தை இடித்து, எருசலேமின் மதில்களை இடித்து நொருக்கி, அங்கே இருந்த பொருட்களையும் தேவாலயத்தின் பணி முட்டுகளையும், பாபிலோனுக்குக் கொண்டு சென்றான். எருசலேம் சுட்டெரிக்கப்பட்டது.

அங்கே சென்றவர்களில் ஒருசில தேவ பிள்ளைகள் கர்த்தரை நோக்கி உபவாசித்து ஜெபித்தார்கள். கர்த்தர் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு அவர்களை மீண்டுமாய் இடிக்கப்பட்ட ஆலயத்தையும், மதில்களையும் கட்ட திரும்பி வரப்பண்ணினார். திரும்பி வந்து இடிக்கப்பட்ட ஆலயத்தைக் கட்டுகிற இந்த செயல், "பலதினாலும் அல்ல பராக்கிறமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" என்று கர்த்தர் சொன்னார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! 'நீங்களே தேவனுடைய ஆலயம் ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் (I கொரி 3:16) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்று சாலோமோன் கட்டின பரிசுத்தமான ஆலயம் தேவனுடைய பிள்ளைகள் செய்த பாவத்தினால் உடைக்கப்பட்டது போல, இன்றும் தேவ ஆலயமாய் இருக்கிற நாம் செய்கிற பாவத்தினால் நம்முடைய பரிசுத்த வாழ்க்கையும் உடைந்து நொருங்கிப்போய்

இருக்கிறது. ஆனால் தேவன் அதை திரும்பவும் கட்டி எழுப்ப வல்லவராய் இருக்கிறார். அன்று நெகேமியா, எஸ்ரா, செருபாபேல், தானியேல் போன்ற தேவ பிள்ளைகள் உபவாசித்து கண்ணீரோடு ஜெபித்தார்கள். அந்த ஜெபத்தினால் பாபிலோன் இராஜாக்களுடைய கண்களில் இரக்கம் கிடைத்து கண்ணீரோடு பரிசுத்த ஆலயத்தைக் கட்டினார்கள்.

அதுபோல நம்முடைய உடைக்கப்பட்ட பரிசுத்த ஜீவியத்தை மறுபடியும் கட்டி எழுப்ப தேவன் வல்லவராய் இருக்கிறார். நாம் நம்மை கர்த்தருடைய கரத்தில் பூரணமாய் அர்ப்பணித்து நம்மை பரிசுத்தப்படுத்த வேண்டும். நாம் பொருளாசையாகிய விக்கிரகாராதனைக்காரராகி, தேவ ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படியாமல், தேவ பயம் அற்றவர்களாய் போய் நம்முடைய பரிசுத்த ஆலயம் தீட்டுப்பட்டுப் போய்விட்டது. பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கொடுத்துப்போட்டான். நாம் நம் பாவங்களை உணர்ந்து அறிக்கையிட்டு ஜெபிக்கும் போது அவர் தம்முடைய ஆவியின் வல்லமையினால் நம்மை நிரப்பி சீர்ப்படுத்தி ஸ்தரப்படுத்தி பலப்படுத்தி நிலைநிறுத்துவார். இது அபிஷேகத்தின் வல்லமையினால் மாத்திரமே முடியும் பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் செய்யமுடியாத காரியத்தை அவருடைய ஆவியினால் செய்து முடிப்பார்.

**I. சீர்ப்படுத்துவார் :** (I பேது. 5:10)

முதலாவதாக தேவன் நம்மை சீர்ப்படுத்த விரும்புகிறார். நம்முடைய இருதயம் உலக ஆசை இச்சைகளினால் நிறைந்து பொருளாசைக்காரரான விக்கிரகாராதனைக்காரராக மாறிவிட்டோம். தேவனுடைய ஆலோசனைகளுக்குச் செவி கொடுக்க மனதில்லை. எனவே உள்ளத்திலே சந்தோஷம் இல்லை, சமாதானம் இல்லை தேவ பிள்ளைகளை உள்ளம் உடைந்து நொருங்கி போய் இருக்கிறார்கள். தேவன் உங்களைச் சீர்ப்படுத்த விரும்புகிறார். அவருடைய சமூகத்தில் அமர்ந்திருந்து பரிசுத்த வாழ்க்கைக்காக உள்ளம் உடைந்து ஜெபியுங்கள். உள்ளத்தின் அசுத்தங்களை அவர் வெளிப்படுத்துவார். நம்மை ஆவிக்குள்ளாய் பெலப்படுத்தி பரிசுத்தப்படுத்துவார்.

**II. ஸ்திரப்படுத்துவார் : (I பேது. 5:10)**

அடுத்தபடியாக பரிசுத்த ஆவியானவர் நம்மை ஸ்திரப்படுத்த விரும்புகிறார். நாம் சத்தியத்தை சரியானபடி அறியாமல் அங்கும் இங்கும் அலைந்து திரிகிறார்களாய் காணப்படும் போது நம் பரிசுத்த ஜீவியம் பங்கப்படும். நாம் நிம்மதி இல்லாமல் தேவ அன்பை புரியாமல் பரிசுத்த ஆலயமாகிய நம் வாழ்க்கையை கெடுத்துப் போடுகிறவர்களாய்க் காணப்படுவோம். இன்று அநேக தேவ பிள்ளைகள் ஸ்திரம் இல்லாதபடியால் பரிசுத்தத்துக்கும், அசுத்தத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் அழிந்து கொண்டிருக்கிறார்கள். தேவ பிள்ளைகளே! அவர் தமது ஆவியினால் உங்களை பெலப்படுத்தி ஸ்திரப்படுத்த விரும்புகிறார்.

**III. பலப்படுத்துவார்** (I பேது. 5:10)

அடுத்தப்படியாக தேவ பிள்ளைகள் தேவனுக்குப் பிரியமில்லாமல் பாவம் செய்து உலகத்தோடு ஐக்கியமாகி தேவ ஆலயமாகிய சரீரத்தை பரிசுத்த குலைச்சலாக்கின படியால், தேவன் அதில் வாசம் பண்ண விரும்பாமல் விலகிவிட்டார். எனவே நாம் தேவ அன்பை விட்டு தேவ பெலத்தை இழந்து உள்ளம் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறோம். நாம் மீண்டுமாக தேவ சமூகத்தைத் தேடி நம்முடைய உலக இச்சைகளை வெறுத்து உள்ளம் உடைந்து கண்ணீரோடு அவரைத் தேடினால் அவர் நம்முடைய பாவங்களை மன்னித்து தம்முடைய ஆவியினால் நம்மை நிரப்பி பெலப்படுத்துவார். இழந்துபோன தேவ மகிமையை மீண்டும் பெறலாம்.

**IV. நிலை நிறுத்துவார் :** (I பேது. 5:10)

கடைசியாக பார்ப்போமானால், தேவன் தங்கும் ஆலயமாகிய நம்முடைய சரீரத்தை தேவன் நிலை நிறுத்த விரும்புகிறார் பரிசுத்த ஆலயமாகிய தம்முடைய சரீரத்தைக் கெடுக்கக் கூடிய அநேக காரியங்கள் உலகத்தில் இருக்கிறது. நாம் அவைகளில் சிக்கிக் கொள்ளும் போது தேவ மகிமையை இழந்து உடைக்கப்பட்ட நிலைக்குள்ளாக மாற்றப்படுகிறோம். நாம் உணர்வடையும் போது நம்மை மீண்டுமாக தேவன் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி பெலப்படுத்தி கடைசியாக நிலைநிறுத்துகிறார். மீண்டும் பாவக்கிரியைகள் நமக்குள் பிசாசு விதைத்துவிடாதபடி தேவன் நம்மை நிலைநிறுத்த விரும்புகிறார். ஆனால் இது நம்மால் கூடாத காரியம். எனவே பரிசுத்த ஆவியானவரின் உதவியைத் தேட வேண்டும் அவர் மட்டுமே நம்மைப் பாதுகாக்க வல்லமையுள்ளவர். எனவே தான் பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று அவர் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! எருசலேமின் தேவாலயத்தை திரும்ப எழுப்பி கட்ட தேவ பிள்ளைகளுக்கு உதவின தேவன் பரிசுத்த ஆலயமாகிய நம்முடைய சரீரத்தையும் பாதுகாக்க வல்லமையுள்ளவர். அதை பிசாசு கெடுத்து உலகத்துக்குள்ளாய் கொண்டுபோய் தீட்டுப்படுத்த விரும்புகிறான். ஆனால் கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற நம்மை சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவராக! தேவ கிருபை நம் அனைவரோடும் இருந்து பெலப்படுத்துவதாக!

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள பரம நம்பிக்கை பங்காளர்களே! உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் எட்டு மாதங்களைக் கடந்து ஒன்பதாவது மாதத்துக்குள்ளாகப் பிரவேசிக்கச் செய்த தேவனை நன்றியோடு துதிக்கிறோம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் இருக்கும் போது செய்த எல்லா ஊழியங்களையும் செய்ய தேவன் கிருபைக் கொடுத்து நடத்தி வருகிறார். எத்தனையோ நெருக்கங்கள் இருந்தாலும் கர்த்தர் தாங்கி வருகிறார். கடந்த மாதம் 15ம் தேதி பாஸ்டர் அவர்கள் 'பாஸ்டர் ஆடினேஷன்' பெற்ற நாள். அந்த நாளில் ஒரு ஸ்தோத்திரக் கூட்டம் நடத்துவது வழக்கம். இந்த ஆண்டிலும் அதுபோல நடத்த வேண்டுமென்று ஜெபித்தோம். அதன்படியே நடத்தக் கர்த்தர் கிருபை செய்தார். அதில் பாஸ்டர் ஜோனத்தான் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கொடுத்தார்கள். ஆசீர்வாதமாக இருந்தது.

கடந்த மாதத்திலே "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம், அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" (உபா.33:27) என்ற வசனத்தைக் கர்த்தர் வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். அதன்படி அவரே அடைக்கலமாக ஆதாரமாக இருந்து நடத்தினார் அவருக்கே மகிமை உண்டாவதாக!

வழக்கமாக நடக்கிற எல்லா ஊழியங்களும் தவறாமல் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை உபவாச ஜெபங்களும் சனிக்கிழமை **Whats app** மூலமாக நடைபெறுகிற ஊழியங்களும் நடைபெறுகிறது. கடந்த வாரம் சனிக்கிழமை (22.8.26) அன்று இராஜாங்குப்பம் கிராமத்தில் பெண்கள் எழுச்சி முகாம் பெண்கள் கூட்டத்தில் கர்த்தருடைய வார்த்தையைக் கொடுக்கக் கர்த்தர் கிருபை செய்தார். என்னை அழைத்து உபயோகப்படுத்தின தேவ பிள்ளைகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தொடர்ந்து எங்களுக்காகவும் எங்கள் ஊழியங்களுக்காகவும், மாம்பலத்தில் சீக்கிரமாக ஆராதனை ஸ்தலம் கிடைக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ரீட்டா ஏசாயா**

## அறிவிப்பு

வாசக நேயர்களே! உங்கள் அன்புக்காகவும் ஜெபத்துக்காகவும் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் விட்டுச் சென்ற எல்லா ஊழியங்களையும் செய்து வருகிறோம். 'சிப்பியில் முத்து' வினா – விடை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் காணிக்கை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் தயவு செய்து பழைய விலாசத்தை மாற்றி புது விலாசத்தில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் ஜெபக் குறிப்புகளை இதே விலாசத்திற்கு அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம் நன்றி!

எங்கள் புதிய விலாசம்

**Sis. Rita Isaiah**
**214/2, AVA Palace,**
**Flat G1, V.G.N. Padma Avenue,**
**Kolapakkam**
**Chennai - 600 128.**
**Ph : 9384710267, 9789893830**

உங்கள் ஜெபமும் ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக! நன்றி.

*Jesus Christ is coming very soon! Are you ready?*

PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

WATCH AND PRAY

Watch! Pray!! Be Holy!!!

SEPTEMBER - 2026

# LOVE THE LORD YOUR GOD

**Jesus replied: Love the Lord your God with all your heart and with all your soul and with all your mind. - Matthew 22:37**

What a beautiful and wonderful command! Jesus says your main responsibility in life is simply to love God. Loving God comes before anything else. Loving God is your number one priority, and anything that takes away from it or interferes with it must be removed or discarded from your life. The first thing to note is that this is not an option. This is God's clear and direct command to all people everywhere for all time. Loving God must naturally begin with the heart. It begins with delighting oneself in Him, Psalm 37:4 says Delight thyself also in the Lord. The heart must have the earnest desire to strive after Him and seek Him for His own sake. Some would call this the internal aspect of love, the aspect which focuses on emotion, disposition and motive. But love cannot remain only as an inward feeling. If it is really genuine love, it will be outwardly expressed and put into action. These internal and external aspects of love can be seen in the words, with all thine heart and with all thy soul, and with all thy might.

We have to love God with every part of our being, with every aspect of our nature, with everything that makes us what we are as humans. To love the Lord with all your heart means that your life centers and revolves around Him. He is at the forefront of all that you think and do. Whatever losses we are willing to bear for the Lord are an indication of how much we really love Him. Abraham loved God more than his beloved son Isaac, and was willing even to sacrifice him upon the altar when God commanded him to do so. In John 14:23, If anyone loves Me, he will keep My word; and My Father will love him, and We will come to him, and make Our abode with him. He who does not love Me does not keep My words; and the word which you hear is not Mine, but the Father's who sent Me. If you really love God, you will obey Him. This is why this commandment is the great and foremost command and the foundation to every other law given by God.

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

Yea, thou shalt see thy children's Children, and peace upon Isreal - (Psa. 128:6)

We love, because He first loved us. It is a very simple statement, but very profound because it clearly demonstrates that our love for God and for other people does not and cannot start within ourselves but must be generated as a response to what God has done first. If He had not first loved us, we would not love. The love of God was manifested in us that God has sent His only begotten Son into the world to be the propitiation for our sins. Beloved, if God so loved us, we also ought to love one another. God's love came to us first in Jesus Christ. Our love for Him and for others can only come as a response to that.

Loving God is not just a Sunday routine. It requires total commitment of your entire being with all your heart, thoughts, words and deeds that originate in the heart. You are born as a unique individual with various personality traits, but you have also been given a mind that can learn and grow and develop. God gave you your mind, and you should use it to bring glory to him. Jesus says to love God with every part of your being. Love him with all you've got! Jesus teaches that loving God and loving people are inseparable. We cannot fully love God without loving those made in His image. Let us love one another, for love comes from God. This is how we know that we love the children of God, by loving God and carrying out his commands. 1 John 4:7 we read, and so whether you acknowledge God in your life or not, any love you show to others comes from God, because God is the source of all love. When you truly love God, you will also love your neighbor.

Jesus asked him three times, Peter, do you love me? And when Peter answered yes each time, Jesus responded with a directive of what to do with his love: he asked Peter Feed my lambs, Tend my sheep, and Feed my sheep. Let us turn our passion for our Lord Jesus Christ into feeding and tending His lambs and sheep, each one of us according to the gifts God has given us, to the places He leads us, in the power He imparts to us by His Holy Spirit. Let us turn our passion into the obedience of constant prayer and daily immersion in His great letter to us, His written Word. Hide it in your hearts, be guided by its instruction, and feast on it for your joy in knowing your Lord better and better. Press on to know Him, He who is worthy of all our love and loyalty and companionship and service and faithfulness, and obedience

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,

## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

To My address:

Sis. Rita Isaiah
214/2, AVA Palace,Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam, Chennai - 600 128.
**Ph : 044-24710267**
**Cell : +91 9384710267, 9789815830**
E-mail : pritaisaiah@gmail.com
Fax : 91-044-24710267
**Our website : www.risaiah.com**

# இருதயத்தை சுத்தமாக காக்கிறதினால் கிடைக்கின்ற ஆசீர்வாதங்கள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்மணியைப் போல் காப்பாற்றினார். இந்த மாதத்திலும் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு நாம் தியானிக்கப்போகிற தேவனுடைய வார்த்தை என்னவென்றால், நாம் நமது இருதயத்தை சுத்தமாக காத்துக் கொண்டால் நமது தேவனை முகமுகமாய் தரிசிக்கும் சிலாக்கியம் பெறலாம். அதுவே பரலோகத்தின் தேவன் நமக்கு தரும் மேலான ஆசீர்வாதம். நமது இருதயம் எப்படிப்பட்டது, இருதயத்தை எப்படி சுத்தமாக காத்துக் கொள்வது, அப்படி காத்துக் கொள்பவர்களுக்கு தேவன் கொடுக்கின்ற ஆசீர்வாதம் எப்படிப்பட்டது என்பதை பார்ப்போம்.

## 1. நமது இருதயம் எப்படிப்பட்டது ?

இருதயம் என்பது மனிதனின் உணர்வுகள், எண்ணங்கள், மற்றும் தீர்மானங்களின் தோற்றமாக உள்ளது. மத்.15:19ல் கூறியபடி "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனுடைய இருதயத்தை தீட்டுப்படுத்துகிறது. எரேமியா 17:9ல் கூறியபடி "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார் ?" என்று கூறுகிறது.

இருதயத்தில் சுத்தம் என்பது "நான் பரிபூரணமானவன், ஒரு தவறும் செய்யாதவன், பக்தியாயிருப்பவன் என்பது அதின் அர்த்தம் அல்ல. மாறாக ஒருவர் வெளியே மிகவும் பக்தியுள்ளவராக தோன்றலாம். ஆனால் உள்ளத்தில், பொறாமை, வெறுப்பு, பெருமை, சுயநலம், கபடம், மன்னிக்காத மனம் இருந்தால், அது இருதயத்தின் அசுத்தமாகும். தேவன் நமது இருதயத்தின் நிலையை ஆராய்ந்து அறிகிறவராயிருக்கிறார். சங்.24:3–4. தேவன் விரும்புகிற மனிதன் "கைகளில் சுத்தமுள்ள வனும், இருதயத்தில் மாசில்லாதவனு மாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே" என்று கூறுகிறார். இயேசு நாத்தான்வேலிடம் "இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்" (யோவான் 1:40) நாத்தான்வேல், இயேசுவினிடத்தில் நற்சாட்சி பெற்றான். I சாமுவேல் 16:7 "மனிதன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்றார். கர்த்தர் நம் இருதயத்தைப் பார்க்கிறவர். ஆகவே நாம் நமது இருதயத்தை ஆராய்ந்து காத்துக்கொள்வோம்.

## 2. இருதயத்தை எப்படி சுத்தமாகக் காத்துக் கொள்ள வேண்டும் ?

நாம் நமது தேவனுடைய வசனத்தை தியானிப்பதின் மூலம் நம் இருதயத்தை காத்துக் கொள்ளமுடியும். தாவீது இராஜா கூறும் போது "நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாத படிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்" தேவனுடைய வார்த்தையாகிய அவருடைய வசனம் நம் இருதயத்தில் தோன்றும் தீய எண்ணங்களை அழிக்கும் மிகப்பெரிய ஆயுதம். சங்.119:113ல் நாம் தியானிக்கும் போது, "வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்" நாம் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால் இருதயத்திலிருந்து புறப்படும் பொல்லாத சிந்தனைகளுக்கு தேவன் நம்மை விலக்கிக் காப்பார். நம்முடைய சொந்த முயற்சியால் மட்டும் இருதயம் முழுமையாக சுத்தமாக காத்துக் கொள்ள முடியாது. சங்.51:10ல் நாம் தியானித்தால் "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை உள்ளத்திலே புதுப்பியும்" என்று தாவீது ராஜா ஜெபிக்கிறார். நீதி 4:23 "எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும் என்று கூறுகிறது. நம்முடைய இருதயத்தை நாம் எல்லா காவலோடும் காத்துக்கொள்வோம். நாம் எதைப் பார்க்கிறோம், எதைக் கேட்கிறோம் என்பவையே நம் இருதயத்திற்குள் செல்லும். தீய காரியங்களை கேட்கவோ, தீய நண்பர்களிடம் பழகுவது, புறங்கூறுதல் போன்றவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும். நம்முடைய சொந்த பலத்தால் இருதயத்தை சுத்தமாக

வைப்பது கடினம். அதற்கு பரிசுத்த ஆவியானவரின் துணை அவசியம். ஒவ்வொரு நாளிலும் காலையிலே நாம் ஜெபிக்கும்போது " சங்.19:14ல் கூறியபடி, என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே , என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரிதியாயிருப் பதாக என்று நாம் தேவனிடம் மன்றாடுவோம்.

### 3. இருதயத்தை சுத்தமாக காத்து கொள்வதினால் வரும் ஆசீர்வாதங்கள்

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக ஜீவிக்கிறவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தேவனுடைய அன்பையும் வழிநடத்துதலையும், அவருடைய கிரியைகளையும் விசுவாசக் கண்களால் தெளிவாகக் காண்பார்கள். இரண்டாவதாக இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மறுமையில் தேவனை முகமுகமாக தரிசிப் பார்கள். இருதயத்தில் சுத்தமில்லாதவர்களால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவோ, தேவனை முகமுகமாய் தரிசிக்கவோ முடியாது. சங்கீதம் 24–3–4ல் "கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து" வசனம் 5ல் அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும் தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்" இருதயத்தில் மாசில்லாதவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதத்தை பெறுவார்கள். சங்.73:1ல் "சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்" நாம் இருதயத்தில் சுத்தமாக இருந்தால், தேவன் நமக்கு எப்போதும் நல்லவர். சங்.7:10ல் "செம்மையான இருதயமுள்ள வர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது" எரேமியா 17:10ல் வாசிப்போமானால், "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதை கொடுக்கும்படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும், உள்ளந்திரியங் களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" தேவன் நம் இருதயத்தை சோதித்தறிந்து நமது செய்கைகக்கான பலனை நமக்கு தந்து நம்மை ஆசீர்வதிக்கிறார். பிரியமானவர்களே நாம் தியானித்த வசனங்களின்படியே தேவ வார்த்தையின்படியே தேவனுக்குப் பயந்து நம் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்வோம். நாம் மறுமையில் நித்திய வீட்டிற்கு சென்று நமது பரம தேவனை முகமுகமாய் தரிசிப்போம். தேவன் தாமே நம் அனைவரையும் வழுவாதபடி காத்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

–மெர்ஸி கிங்சிலி


**உங்கள் பிரயோஜனத்துக்காக யூடியூப் (You Tube) :-**

Paramanambikkai Messages
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries

**பாருங்கள்**


**இடத்திற்காக**

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங் களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – www.risaiah.com

**<u>உங்கள் கவனத்திற்கு</u>**

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவியானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **'Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள் **(Phone Number 044-26613242).** பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

***www.risaiah.com*** *இணையதளம் மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்து கொள்ளுகிறேன்!* –போதகர் ஆர்.ஏசாயா

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | ராகாப் | – யோசு 2:15 |
| 2. | சவுல் | – I சாமு 9:18 |
| 3. | தாவீது | – II சாமு 7:18 |
| 4. | பில்தாத் | – யோபு 8:14 |
| 5. | ஆகாய் | – ஆகா 1:4 |
| 6. | யுஸ்து | – அப்.18:7 |
| 7. | பவுல் | – II கொரி 5:1 |
| 8. | மரியாள் | – அப்.12:12 |
| 9. | சகேயு | – லூக்.19:9 |
| 10. | திமிர்வாதக்காரன் | – மாற்கு 2:4 |

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சகோ. தங்கம் ஐசக் | – வேலூர் |
| 2. | சகோ. கிப்ஸ்சன் ஜோசுவா | – நாசரேத் |
| 3. | சகோ.சரோஜினி கோயில்பிச்சை | – பாளையங்கோட்டை |
| 4. | சகோ. ரதி ஜாய்ஸ் | – கே.கே.நகர் |
| 5. | சகோ. பிரேமா ஜெயசேகர் | – வானகரம் |
| 6. | சகோ. ராதா | – பெருமாள்புரம் |
| 7. | சகோ. எசேக்கியேல் குமரன் | – புளியந்தோப்பு |
| 8. | சகோ. எஸ்தர் பானு | – பொழிச்சலூர் |
| 9. | சகோ. ரெஜினா வின்செண்ட் | – பெங்களூர் |
| 10. | சகோ. மேரி புஷ்பம் | – துரைபாக்கம் |
| 11. | சகோ.வசந்த் கமாலியேல் | – வேலூர் |
| 12. | சகோ. தங்கத்தாய் | – பெருமாள்புரம் |
| 13. | சகோ. லில்லி புஷ்பம் | – மாம்பலம் |
| 14. | சகோ. ரெஜினா மேரி | – பெருமாள்புரம் |
| 15. | சகோ.மெர்ஸி கிங்ஸ்லி | – கொளப்பாக்கம் |
| 16. | சகோ. எஸ்தர் டேவிட் | – கொளத்தூர் |
| 17. | சகோ. புனிதா அசரியா | – அண்ணா நகர் |
| 18. | சகோ. சித்ரா | – பெங்களூர் |
| 19. | சகோ. ஷிபா ஞானதுரை | – கோவை |
| 20. | சகோ.ஷேரன் நிர்மல்குமார் | – திருப்பத்தூர் |
| 21. | சகோ. எமிமா | – பொழிச்சலூர் |
| 22. | சகோ. அருணா | – வண்டலூர் |
| 23. | சகோ. கேத்தரின் கவிதா | – திருவண்ணாமலை |
| 24. | சகோ. இராஜகுமாரி | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 25. | சகோ. பெர்சிஸ் | – வேளச்சேரி |
| 26. | சகோ. மார்கிரேட் ஜோ | – கோவை |
| 27. | சகோ. ஜெபா பெனியேல் | – எம்.ஜி.ஆர். நகர் |
| 28. | சகோ. சிப்போராள் எபனேசர் | – மாம்பலம் |
| 29. | சகோ. சுலோச்சனா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 30. | சகோ. லிடியா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 31. | சகோ. எப்சி இம்மானுவேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

## இம்மாத சிப்பிகள்

1. தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்றது யார் ?
2. சகல வேலைகளையும் செய்யும்படி கர்த்தர் யாரை தேவ ஆவியினால் நிரப்பினார் ?
3. வேறே ஆவியை உடையவனாயிருந்தவன் யார் ?
4. ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டவன் யார் ?
5. கர்த்தருடைய ஆவியானவர் யாரை ஏவத்துவக்கினார் ?
6. கர்த்தருடைய ஆவி யாரை விட்டு நீங்கினார் ?
7. கர்த்தருடைய ஆவி யார் மேல் பலமாய் இறங்கினார் ?
8. கர்த்தருடைய ஆவி எந்த வழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது என்றது யார் ?
9. ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாக கடந்தது என் உடலின் மயிர் சிலிர்த்தது என்றது யார் ?
10. இதே மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள் என்று ஆவியானவர் யாரிடம் கூறினார் ?

குறிப்பு: உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது **www.risaiah.com "E-Magazine'** சென்று கீழ் இறக்கம் **(Down Load)** செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம் **(Download)** தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள். **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
214/2, AVA Palace, Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam Chennai - 600 128.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Sis. Rita Isaiah from at 214/2, AVA Palace, Flat G1, VGN Padma Avenue, Kolapakkam, Chennai-128.
for Paramanambikkai Ministries Trust.